# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலைப் பீடம்

## சிறப்புக் கலைமாணிப் பரீட்சை, பகுதி III, 2019

முதலாம் பருவம், இறுதிப் பரீட்சை

நேரம் : 3 மணித்தியாலங்கள்

## GYG 4173 - விமான ஒளிப்பட விவரணம்

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து எல்லாமாக இரண்டு (2) வினாக்களுக்கு விடை தருக.**

**(விமான ஒளிப்படங்கள், இரண்டு வரைதாள்கள், இரண்டு கொடா படியெடுப்புத்தாள்கள், திட்பக் காட்சிக் கருவிகள் என்பன வழங்கப்படும்)**

### பகுதி I

(1) இலங்கையின் மலைநாட்டுப் பகுதிக்குரிய விமான ஒளிப்படங்கள் மூன்று தரப்பட்டுள்ளன.

ஒளிப்பட இலக்கங்கள் : 104, 105, 106
அளவுத்திட்டம் : 1:20,000
வருடம் : 1992

105 ஆவது இலக்க ஒளிப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) படப் பகுதிக்குரிய புவிவெளியுருவவியல் படமொன்றினை அமைக்குக. பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தி படத்துக்கான குறிவிளக்கத்தினைத் தயாரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) படப் பகுதியில் காணப்படும் நீரியல் நிலைமைகளுக்கும், புவிவெளியுருவவியல் அமைப்புக்கும் இடையிலான தொடர்பினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

(2) இலங்கையின் மூன்று விமான ஒளிப்படங்கள் தரப்பட்டுள்ளன. விமான ஒளிப்படங்களின் விவரங்கள் பின்வருமாறு:

ஒளிப்பட இலக்கம் : 60,61,62
அளத்திட்டம் : 1:20,000
வருடம் : 1992

61 வது இலக்க விமான ஒளிப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக. பொருத்தமான குறியீடுகள், நிறங்களைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றினை கொடா படியெடுப்புத் தாளில் குறித்துக் காட்டுக.

(i) பிரதான நீர்த்தேக்கமும் ஏனைய சிறிய குளமும்
(ii) புகையிரத நிலையத்துடன் புகையிரதப் பாதை
(iii) நகரப் பகுதி
(iv) இரண்டு விளையாட்டு மைதானங்கள்
(v) அகன்ற மற்றும் ஒடுக்கமான பள்ளத்தாக்குடன் இணைந்து காணப்படும் நெல் வயல்கள்
(vi) இரண்டு தென்னை நிலங்கள்
(vii) இரண்டு வீட்டுத் தோட்டங்கள்
(viii) இரண்டு கிராமியக் குடியிருப்புக்கள்
(ix) இரண்டு காட்டுநிலப் பகுதிகள்
(x) பாறை வெளியரும்புடன் கூடிய இரண்டு நிலங்கள்

(20 புள்ளிகள்)

(3) (i) தரையியல் பகுப்பாய்வு மற்றும் பாகுபாட்டினை மேற்கொள்ளும் போது விமான ஒளிப்பட விவரணத்தில் பயன்படுத்தக்கூடிய அணுகுமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நீரியல் தொடர்பான விமான ஒளிப்பட விவரணத்தில் இவ் அணுகுமுறைகள் எந்தளவுக்குப் பங்களிக்க முடியும் என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

(4) (i) பகுதியொன்றில் காணப்படும் தாவர சமுகத்தினை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான உயிர் வடிவங்கள் (Life forms) யாவை? (04 புள்ளிகள்)

(ii) இவ் வடிவங்களை இனங்காண்பதற்குப் பயன்படுத்தக் கூடிய பிரதான ஒளிப்படப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நிலப்பயன்பாட்டு வகையின் பிரதான பிரிவுகளைக் குறிப்பிட்டு, 1952 இல் சர்வதேச புவியியல் ஒன்றியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலப்பயன்பாடு மற்றும் நிலப்போர்வைக் குறியீட்டு விளக்கத்தின் கூறுகளுடன் இணைந்து காணப்படும் பிரச்சினைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

@@@@@